★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 28 ரபி. ஆகி 26 இதழ் 363

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10—2—83

## வண. பிதா சிங்கராயரின் கடிதம்

## பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேச கூட்டணி தீர்மானம்

[கொழும்பு]

வண. பிதா சிங்கராயர் ஜனதிபதிக்கு எழுதிய கடிதத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுவதென்று கொழும்பில் நேற்று நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை நீதவான் திரு. திலகர் இராணுவத்தினரால் அவமானப்படுத்தப்பட்டது பற்றியும் பாராளுமன்றத்தில் பேசுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வவுனியா மாவட்ட சபை நிறைவேற்றுக் குழுவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதை ஆங்சேபித்து ஜனதிபதிக்குக் கடிதம் எழுதுவதென்றும் கூட்டணிப் பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பற்றியும் ஏப்ரலில் நடைபெறும் மாநாடுபற்றியும் கட்சி அமைப்புப்பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. [இ]

# தொழில்நுட்ப சகாப்தத்தை நோக்கி அழைத்துசெல்கிறோம்

## பாராளுமன்ற ஆரம்ப விழாவில் ஜனதிபதி உரை

### ஆங்கிலத்தின் நிலையைஉயர்த்தவும் உறுதி

(கொழும்பு)

"சமகால நிலைமைகளுக்கேற்ப ஆன்மீக, லௌகீக வளர்ச்சிக்கான அடித்தளம் போடப்பட்டுள்ளது. நாம் எமது இளைஞர்களை தொழில்நுட்ப சகாப்தத்துக்கு அழைத்துச்செல்ல விரும்புகின்றோம். இதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாராக்கப்பட்டுள்ளன."

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று பாராளுமன்றத்தின் புதிய அமர்வை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தும்போது இவ்வாறு கூறினர்.

நாட்டின் இரு சமூகங்களான சிங்களவர் தமிழர்களுக்கிடையிலும் சர்வதேசமட்டத்திலும் தொடர்பு மொழியாக இருக்கும் வகையில் ஆங்கில மொழியையும் போதனமொழியாக்குவதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாகவும் ஜனதிபதிகுறிப்பிட்டார்.

ஜனதிபதி திரு. ஜெயவர்த்தன நிகழ்த்திய உரையின் சில அம்சங்கள் வருமாறு:-

"எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அமுல்படுத்தப்பட்டாலும், எம்மை எதிர்நோக்கும் பிரச்னைகள்– அபிவிருத்தியடைந்த – அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் சேர்ந்து நாம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்ந்தும் இருக்கவே செய்யும்.

அவற்றை நாம் ஒருமித்து எதிர்நோக்கும் நிலையில் இருக்கின்றோம். நாம் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

நாம் உருவாக்கியுள்ள ஒழுக்கநெறிக் கோவையின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மீதான புகார்கள் நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கத் தவறமாட்டோம்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பொருளாதாரமந்த நிலையும் வேலையின்மையும் அதிகரித்துள்ளது. அந்நாடுகளில் வேலையிலிருந்த 3 கோடி பேர் வேலையிழந்துள்ளார்கள்.

[8-ம் பக்கம் பார்க்க]

## நிதி அமைச்சர் இனி புளத்சிங்கள எம்.பி!

### தெவிநுவர ராஜினமா!!

(கொழும்பு)

தெவிநுவர எம்.பி. பதவியிலிருந்து நிதியமைச்சர் திரு. ரொனி டிமெல் ராஜினமாச் செய்தார். திரு. ரொனிடிமெல் புளத்சிங்கள எம். பி.யாக நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அறிவித்தார். திரு. மெல் நிதியமைச்சராகத் தொடர்ந்து இருப்பார்.

சுகவீனம் காரணமாக புளத்சிங்கள எம். பி. திரு. ஏ. எஸ். பெரேரா ராஜினமா செய்திருந்தார். [இ]

## வட்டு. எம். பி. இன்னும் முடிவில்லை

[கொழும்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதிக்குப் புதிய எம். பி. தொடர்பாக இன்னும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

தேர்தல் ஆணையாளரிடம் இருந்து இதுபற்றிய அறிவித்தல் வராதபடியினுல் முடிவு எடுக்கப்படவில்லையெனக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [இ]

## சிங்களத்தில் நடத்த முடிவு

(கொழும்பு)

திருக்கோயில் வங்கிக் கொள்ளைவழக்கு விசாரணையைச் சிங்களத்தில் நடத்துவதென்றும், விசாரணையைத் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாராளுமன்ற 3-வது கூட்டத்தொடர்: ஜனதிபதி தலைமைவகித்து உரை நிகழ்த்தினர்

(இ. கந்தசாமி)

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் முதலாவது பாராளுமன்றத்தின் மூன்ருவது கூட்டத் தொடரை கோட்டை ஸ்ரீஜயவர்தனபுரத்தில் நேற்றுக்காலை 9–42மணிக்கு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

மோட்டார் கார் பவனியாக ஜனதிபதி திரு.ஜெயவர்த்தன தம்பதியர் வந்து சேர்ந்தனர். முப்படையினரின் அணிவகுப்புடன், 21வேட்டுகளும் தீர்க்கப்பட்டு, ஜனதிபதி வரவேற்கப்பட்டார்.

சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரும், பாராளுமன்றச் செயலாளர் நாயகமும் பிரதான முன்வாயிலின் முன்பாக ஜனதிபதியை வரவேற்று அழைத்துச்சென்றனர். ஜனதிபதியின் கொடி பறக்கவிடப்பட்டது

பாராளுமன்ற சபாமண்ட

(8-ம் பக்கம் பார்க்க)

இன்று குதூகல திறப்புவிழா

கண்ண கற்பூரத்தொழிற்சாலை திருநெல்வேலிதெற்கு

உரிமையாளர் த. மகாலிங்கம்

காலை 9 மணியளவில் பிரபல யாழ். வர்த்தகர் திரு. கு. சிவப்பிரகாசம் அவர்களால் திறந்துவைக்கப்படும். ஆதரவாளர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 6149

## "நாணய மதிப்புக் குறைப்பு: சர்வ தேச நிறுவனம் எதனுடனும் ஒப்பந்தம் எதுவும் இல்லை"

### பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

"நாணய மதிப்புக் குறைப்பது சம்பந்தமாக சர்வதேச நிறுவனங்கள் எவற்றுடனும் அரசு ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை. நாட்டுக்கு நன்மையான விஷயங்களையே செய்வோம்.

"இந்த நாட்டையும் மக்களையும் நாம் என்றுமே நாசப்படுத்தமாட்டோம். பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவோம். சர்வதேச நிதி ஸ்தாபனத்தினதோ, உலகவங்கியினதோ சொற்படி நாம் எதையும்செய்யமாட்டோம்."

இவ்வாறு நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சம்பிரதாய பூர்வமாகப் பாராளுமன்றக்கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்டபின்னர், பிரதமர் திரு. பிரேமதாசா சபை அமர்வுநேரத்தை வெள்ளிக்கிழமை போன்று அமையுமாறு பிரேரித்தார். இதன்பின் ஒத்திவைப்புப் பிரேரணையையும் பிரதமர் பிரேரித்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணை மீது அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசினர். அவரது குற்றச்சாட்டுகளுக்கு நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் பதிலளித்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பட்ஜட் பற்றி எந்தவிதமான தகவல்களையும் நான் இப்போதைக்குச் சொல்லப் போவதில்லை. 1975-ம் ஆண்டு தகவல்கள் வெளியிடப்பட்டதால், உபாலி 3 கோடிரூபாய் சம்பாதித்தார். இப்படி நான் வேறு 'எவரும்' சம்பாதிப்பதற்கு இடமளிக்கமாட்டேன்.

"நாட்டைப்பற்றி, அது நாசமாகிவிடுமோ என்று எவரும் கவலைப்பட வேண்டாம். அப்பிரச்னை என்றுமே ஏற்படமாட்டாது"

அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

"நாணய மதிப்புக் குறைப்புச் செய்யப்படுமென்று இப்போது அடிபடும் செய்தி உண்மையா?

"சர்வதேச நிறுவனங்களுடன் நிதி அமைச்சர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையில் நிதி அமைச்சர் பெற்ருரா?

'ஒபெக்' நாடுகள் எண்ணைவிலையைக் குறைந்துள்ளன. தேயிலை அதிகரித்துள்ளது. சீனி விலை அதிகரித்துள்ளது. 'பட்ஜட்' வரும்போது நேற்று அறிவிக்கப்பட்ட துண்டுவிழும் தொகை இரட்டிப்பாகிவிடும்.

(8-ம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. குமாரசாமி (சின்னவாணம்) 39/10 மின்சார நிலைய வீதி, 3வது ஒழுங்கை, யாழ்ப்பாணம். 6102

### தேவை

அரைக்கும் யந்திரத்தில் (கிறைண்டரில்) வேலை செய்வதற்கு தேக ஆரோக்கியமும் முன் அனுபவமும் உள்ள இரண்டு ஆட்கள் தேவை. முன்வேலை செய்த ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட நற்சாட்சிப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேரில் வரவும். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி 191, (53) காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம். 6136

## ஊரங்குணையில் சர்வோதயவிழா

(மயிலிட்டி)

வடமாகாண சர்வோதய சபையின் விழா ஊரங்குணையில் சர்வோதய சமித்தித் தலைவர் திரு. இ வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

திரு. வ. கனகரத்தினம், திரு. கோ. வேலாயுதம் ஆகியோர் மங்கல விளக்கேற்ற, செல்விகள் பவானி சுப்பையா, மகேஸ்வரி இரத்தினம், ஜெயந்தி முத்துத்தம்பி, அன்னமலர் ஞானசுந்தரம் ஆகியோரின் சர்வோதய கீதத்துடன் விழா ஆரம்பமானது.

சர்வோதய பரிசிழுப்பும் நடைபெற்ற இவ்விழாவில் கட்டுவன் கிராமோதய சபைத் தலைவர் திரு. நா. கிருஷ்ணமூர்த்தி, மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலய அதிபர் திரு. வை. நாகராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். செல்வி சோபனா வேலாயுதம் பக்திப்பாடல் இசைத்தார். செல்வன் பிறேம்குமார் காங்கிவாகி செந்திநாதையர் பற்றிப் பேசினார். மற்றும்கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (மா)

## ஈழத்துச்சிதம்பரம் கோபுரத்திருப்பணி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவன், ஐயனார் மூர்த்திகளின் கோபுர வேலைகள் நடைபெற்று வருகின்றன. கோபுர அமைப்பு வேலைகளில் 'வானம்', 'ஸெகதி', 'கண்டம்', 'குமுதம்' ஆகிய அமைப்பு பூர்த்தியாகியுள்ளன.

சிவன் கோபுரம் 65 அடி உயரத்திலும், ஐயனார் கோபுரம் 45 அடி உயரத்திலும் அமையவுள்ளன. இதில் முதற்கட்ட கருங்கல் வேலைகளுக்கு 10 லட்சம் ரூபாவும், 2ம் கட்டமாக அமையும் சிற்ப வேலைகளுக்கு 5லட்ச ரூபாவும் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (உ—அ)


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்

(i) வீடு — 4½ பரப்பு காணியுடன் செட்டித்தெரு.

(ii) வீடு — 2½ பரப்புக் காணியுடன் சிவன் பண்ணை வீதி.

கொக்குவில்

(i) 5 பரப்புக் காணி பொற்பதி வீதி,

(ii) 1½ பரப்புக் காணி பொற்பதி வீதி.

(iii) 2 பரப்புக் காணி குளப் பிட்டி ஒழுங்கை

கோண்டாவில்

2 பரப்புக் காணி நவரத்தினசாமி வீதி.

தெல்லிப்பளை

8 பரப்புச் காணி அன்னம்மா கோவில் வீதி.

கைதடி

10 பரப்புக் காணி கண்டி வீதி

வவுனியா

வீடு — 3 பரப்புக் காணியுடன் கதிரேசன்வீதி.

திருக்கோவில்

மில் — 15 பரப்புக் காணியுடன்.

மேலதிக விபரங்களுக்கு:

தமிழினன்ஸ் கொம்பனி லிமிற்றெட்,

(Real Estate Division)

249, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-23680


## வலிவடக்கில் பரீட்சார்த்த கோதுமை உற்பத்தி வெற்றி

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் பரீட்சாத்தமாக மேற்கொள்ளப்பட்ட கோதுமை உற்பத்தி வெற்றிகரமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வலிவடக்கில் பரீட்சார்த்தமாக கோதுமையை பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு இலவசமாக கோதுமை விதைகளும் உரம், பசளை என்பனவும் விவசாயப் பகுதியினரால் வழங்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு விவசாயியும் 200 சதுரஅடி நிலத்தில் இந்தக் கோதுமை உற்பத்தியை மேற்கொண்டிருந்தனர்.

இக் கோதுமைச் செடிகள் உரிய நாட்களில் கதிர்வந்து செழிப்புற்றிருப்பதாக விவசாய விசாலிப்பு சேவையாளர்கள் தெரிவித்தனர். (வெ)

## கொழும்புத்துறை அன்னை வேளாங்கன்னி மாதா ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை அன்னை வேளாங்கன்னி மாதாவின் ஆண்டு உற்சவம் இன்று வியாழன் முதல் நாளைவெள்ளிவரை நடைபெறுகிறது.

இன்றுமாலை திருப்பலி பூசையும் நாளைமாலை திருநாட்பூசையும் மாதாவின் திருச்சுருப பவனியும் நடைபெறவுள்ளன. (உ)

## உற்சவம்

(கரவெட்டி)

பருத்தித்துறை தும்பளை புனித லூர்த்து மாதா தேவாலய வருடாந்த உற்சவம் மாதம் நாளை காலை நடைபெறும் கூட்டுப் பலிப்பூசை ஆராதனையுடன் நிறைவுபெறுகின்றது.

இன்றுதிருச்சொரூப சுற்றுப் பிரகார ஆராதனையும் இடம் பெறும்.

## "தூயஉள்ளத்துடன் வாழ்ந்தவர்"

(மயிலிட்டி)

"தூய உள்ளத்துடன் இயந்திரமயமாக இயங்கி எல்லாத் துறையிலும் சிறந்து விளங்கியவர் அமரர் கலாநிதி சுந்தரலிங்கம். பாரதியார் கூற்றுக் கிணங்க கடின உழைப்புடன் முன்னேறி நமது நாட்டுக்குச் சிறந்த பணியாற்றியவர் அவர்"

இவ்வாறு தலைவார்விளத்தில் நடைபெற்ற நாவலப்பிட்டி புகையிரதநிலைய உதவி அதிபராகக் கடமையாற்றியவரும், இலங்கைப் போக்குவரத்துச்சபை இயக்குனராகப் பணியாற்றியவருமாகிய அமரர் கலாநிதி திரு க சுந்தரலிங்கத்தின் இறுதிக்கிரிகைகளுக்கு முன் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் அஞ்சலியுரையாற்றிய அவரது நண்பரும், காங்கேசன்துறை புகையிரதநிலைய அதிபருமாகிய திரு. செகராஜசிங்கம் கூறினார்.

வர்த்தலைவிளான் அ. மி த. க. பாடசாலை அதிபர் திரு. சி. சின்னத்தம்பி தலைமையில் இவ்வஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

## மானிப்பாயில் சிவராத்திரி விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் நகர மண்டபத்தில் சிவராத்திரி விழாவை மானிப்பாய் பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா சமித்தியினர் கொண்டாடுகின்றனர். நாளையும், நாளை மறுநாளும் . மாலை இவ்விழா நடைபெறவுள்ளது.

## சாயிசேவா நிர்வாகிகள்

(மானிப்பாய்)

பகவான் சத்யசாயி சேவா சமித்தியின் புதிய நிர்வாக சபை இணைப்புக்குழு அங்கத்தவர்கள் ஸ்ரீ கே. ராஜாவினதும், ஸ்ரீ வி. கே முத்துலிங்கத்தினதும் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ சோ. சிவசுப்பிரமணியம் தலைவராகவும், ம. இராஜரட்டினம் காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பழையமாணவர் சங்கம்

வருடாந்த விழாவும்

வருடாந்தப் பொதுக்கூட்டமும்

20-2-1983 ஞாயிற்றுக்கிழமை

W. S. செந்தில்நாதன்,

செயலாளர்.

யாழ். இந்துக்கல்லூரி,

10-2-83.

(6142)



# FRENCH FILM FESTIVAL

at the

**Shanthy Cinema**

Organised by the French Embassy and the Alliance Francaise de Jaffna

130, 1st Cross St., Jaffna

From 9th to the 14th February 1983

Title;
1. DONKEY'S SKIN
2. PEPERMINT SODA
3. COLD CUTS
4. A WEEK'S HOLIDAY
5. SWINDLINGS OF SCAPIN
6. MOLIERE

All film wil be sub-titled In English.

(6131)



சகலவிதமான மணிக்கூடுகளையும்

உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்

புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

## டில்கா வாச் வேக்ஸ்

## Dilka Watch Works

(Opposite Bus stand)

(பஸ்நிலைய எதிர் மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

போன் : 24174.



மகாராஜா ஸ்தாபனத்தாரின் வடபகுதி

# எஸ் லோன்

# புதிய விநியோக நிலையம்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தாரால் சேவைப்படுத்தும்

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள "எஸ் லோன்" விநியோக நிலையம்

எஸ் லோன் விற்பனையாளரின் வசதியைக் கருதி

ஸ்ரான்லி றேட் 158-ம் இலக்க எஸ். வி. எம். கட்டிடத்தில்

மகாராஜா ஸ்தாபன சந்தைப்படுத்தும் முகாமையாளர்

திரு. T. S. கணேந்திரன் அவர்களால்

1983-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10-ந் திகதி

இன்று வியாழக்கிழமை பகல் 12-00 மணியளவில்

திறந்துவைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றேம்.

# நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## அறிவித்தல்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி 220A இலக்கத்தில் இருக்கும்

செல்லையா சிவபாதலிங்கம் நகைமாளிகையில்

கணக்காளராக கடமையாற்றிய

கி. ஞானப்பிரகாசம்

என்பவர் 7-2-83ல் இருந்து எமது ஸ்தாபனத்தின்

சகல பொறுப்புகளில் இருந்தும் விலகிவிட்டார்.

இன்று தொடக்கம் அவருடைய

கொடுக்கல் வாங்கல்களிற்கு நாம் பொறுப்பல்ல

என்பதை சகல வாடிக்கையாளர்கட்கும்

அறியத்தருகிறேன்.

உரிமையாளர்.

(6132)

## பெய்ரூட் படுகொலைகள்:

# இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஷெரொன் பொறுப்பு!

## ஆய்வுக்குழு கண்டுபிடிப்பு

ஜெருசலம், பெப்.9

பெய்ரூட்டில் கடந்த ஆண்டு செப்டம்பரில் பாலஸ்தீனரின் இருமுகாம்களில் நடைபெற்ற படுகொலைகளை ஆராய்ந்த அறிக்கை சமர்ப்பித்துள்ள, விசாரணை குழுவினர் கண்டுபிடித்து தமது அறிக்கையில் கூறியுள்ள தகவல்களுக்கு இஸ்ரேலிய அமைச்சரவையில் பெரும் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய் இஸ்ரேலிய அமைச்சரவையில் பிரதமர் மெனச்சம் பெகினால் ஆணைக்குழுவின் அறிக்கை ஆய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோதே அமைச்சர்களில் பெரும்பாலனோர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

படுகொலைக்கான காரணிகள் பற்றிய மேற்படி அறிக்கையில் படுகொலைக்கான பொறுப்புகள் பாதுகாப்பு அமைச்சர் ஷெரான்மீது சுமத்தப்பட்டுள்ளது. அமைச்சர் ஷெரான் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது இரத்தக்களரி ஏற்படவழிவகுத்துள்ளதாகவும்பாதுகாப்பு அமைச்சர் ஷெரான் தமது அமைச்சர்பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது முக்கியமான தகவல்களில் ஒன்றாகவுள்ளது. இதுவரை பாதுகாப்பு அமைச்சர் ஷெரான். வெளியுறவு அமைச்சர் ஈட்ஷாக் ஷாமிர் ஆகியோரைக் குற்றம் சாட்டியுள்ளது இவ்வறிக்கை இதனையடுத்துப் பாதுகாப்பு அமைச்சர் ஷெரான் தமது பதவியை ராஜினாமாச் செய்ய மறுத்தினர்.

ஆணைக்குழுவின் அறிக்கையின் ஆய்வு அமைச்சரவையினால் தொடர்ந்து ஆராயப்பட்டு வருவதற்கான விசேட கூட்டம் தொடர்கின்றது. விசாரணைக்கான ஆணைக்குழுவில் மூன்று நீதியரசர்கள் அங்கம் பெற்றுள்ளனர். [உ]

## ஞாபக மறதியினால் அமைச்சர் பதவி பறிபோனது!

(நியூயோர்க்)

தன்னுடைய ஞாபக மறதியினால் அமைச்சர் ஒருவர் தன் பதவியையே இழக்கநேரிட்டது! கனடாவைச் சேர்ந்தது குபெக்; அரசில் கிளாடி சுபரன் என்பவர் ஒரு மூத்த அமைச்சராக இருந்தார். அவரிடம் ஒரு குறை – ஞாபக மறதி அதிகம். அந்த அமைச்சர், சமீபத்தில், ஒரு சிறப்பங்காடிக்குச் சென்றார். அங்கு 'ரெடிமேட்' கோட் ஒன்றை வாங்கினார். அதுவிலைஉயர்ந்த துணியால் ஆனது. அறையொன்றுக்குள் நுழைந்து, நிலைக்கண்ணாடி முன் நின்று, தனது 'கோட்' தனக்குப் பொருந்துகிறதா என்று அழகுபார்த்தார். பின்னர் வெளியேறினார். வீட்டில் இருந்து உடைமாற்றிச் செல்வதாக (ஞாபகமறதியினால்) நினைத்து, கடைக்காரருக்குப் பணம் கொடுக்காமல் சென்றுவிட்டார்!

கடைக்காரருக்கு இவர் அமைச்சர் என்ற விஷயம் தெரியவந்ததும், விடவில்லை. பொலிஸ், 'கோடு' என்று சென்றார். முடிவு: அபராதம் விதிக்கப்பட்டது அமைச்சருக்கு! ராஜினாமா செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது". (உ)

## அடுத்தாண்டு ஏப்ரலில்: மேற்கு ஐரோப்பாவிற்கு சோவியத் எரிவாயு விநியோகம்

மாஸ்கோ, பெப். 9

சோவியத் யூனியனின் சைபீரியா – மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி நாடுகளுக்கான எரிவாயு விநியோகத்திட்டத்தின் அரைப் பங்கு குழாய் அமைப்பு இணைப்பு வேலைகள் பூர்த்தியாகியுள்ளது.

இவ் எரிவாயு விநியோக குழாய் வழியின் மொத்த நீளம் 4,465 கிலோ மீட்டராகும். இதன்மூலம் ஆண்டுக்கு 3,200 கோடி கனமீட்டர் எரிவாயுவை சோவியத் யூனியன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 1984 ஏப்ரல் முதல் விநியோகிக்கும். (உ)

## பெப். 27ல் திருச்செந்தூர் இடைத்தேர்தல் வாக்களிப்புத்தினம்

சென்னை, பெப். 9

திருச்செந்தூர் தொகுதியின் இடைத்தேர்தல் இம்மாதம் 27ந் திகதி நடைபெறும் என மத்திய தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளதாக தமிழக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

இத்தேர்தலின் வாக்குப் பதிவு பெப்ரவரி 27ந் திகதி காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும். வாக்குகளை எண்ணுதல் மறுநாள் பெப்ரவரி 28ந் திகதி காலையில் ஆரம்பித்து மாலை 4மணிக்குள் முடிவு வெளியிடப்படும். ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 757 பேர் தமது வாக்குகளைப் பதிவு செய்யவும் தகுதி பெற்றுள்ளனர். (உ)

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். ஒருநாள் உண்ணாவிரதம்

சென்னை, பெப். 9

தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று புதன் காலை முதல் மாலைவரை சென்னை அண்ணா சமாதியில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் செய்வதாக தமிழக சட்டமேலவையில் கடந்த செவ்வாய் அறிவித்து, உண்ணாவிரத நடவடிக்கையில் ஈடுபட்டார்.

பாரத மத்திய அரசு தமிழகத்திற்கு அரிசி வழங்குவதில் புறக்கணிப்பு நடவடிக்கையை கைக் கொள்ளுகின்றமையைக் கண்டித்தே முதலமைச்சர் எம். ஜி ஆர். மேற்படி அடையாள ஒருநாள் உண்ணாவிரதம் செய்தார்.

"தமிழக முதலமைச்சரின் உண்ணாவிரதம் ஒருதுரதிர்ஷ்டவசமான நடவடிக்கையாகும். மத்திய அரசு நியாயமான, சரியான முறையிலேயே மத்திய பாரத உணவுக் கார்ப்பரேஷன் மூலம் அரிசிப்பங்கீட்டை மாநிலங்களுக்கு வழங்கிவருகிறது. ஆனால் தமிழக மாநிலம் பிறமாநிலங்களைப் போல் மத்தியஅரசுடன் பூரணமாக ஒத்துழையாது இருந்துவருகிறது. மாநிலங்கள் தம்மிடம் உள்ள மேலதிக நெல்லை மத்திய பாரத உணவுக் கார்ப்பரேஷனுக்குவழங்கி வருகின்றன. இதனைக் கொண்டே மத்திய அரசு மாநிலங்களுக்கு அரிசிப்பங்கீடு செய்கின்றது. தமிழகமாநிலம் தனது மேலதிக கையிருப்பான நெல்லை மத்திய அரசுக்கு ஒப்படைக்க மறுத்துள்ளது".

இவ்வாறு முதலமைச்சரின் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் பற்றி புதுடில்லியில் இருந்து மத்திய அரசின் பிரதம பேச்சாளர் இன்று புதன் காலை கருத்து வெளியிட்டுள்ளார்.

புதுடில்லியில் இருந்து வெளியான கருத்தையடுத்துஉண்ணாவிரதம் மேற்கொள்வதன் முன்பு இன்று காலையில் தமிழக முதலமைச்சர் பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்; 'மத்திய அரசு தமிழக மாநிலத்துக்கு அரிசிப்பங்கீட்டில் புறக்கணிப்புக்கொள்கையையே கடைப்பிடித்துவருகிறது. தமிழகத்தில் பருவநிலைமைகளின் ஒத்துழைப்பின்மையால் வரட்சியால் உணவு உற்பத்தி மோசமாகப் பாதித்துள்ளது. தற்போது கையிருப்பில் உள்ள அரிசி, நெல்லைக் கொண்டே மக்களுக்கு அரிசி வழங்கப்பட்டும், இலவசச்சத்துணவுத்திட்டம் அமுலாக்கப்பட்டும் வருகின்றது. தமிழகத்தில் மேலதிக அரிசிக்கையிருப்பு இல்லை'. (உ)

## அகாலிகள் பிரச்னை முத்தரப்பு பேச்சுவார்த்தை இடைநிறுத்தம்

புதுடில்லி, பெப். 9

அகாலித்தலைவர்கள். மத்திய அரசின் அமைச்சர்குழு, எதிர்க்கட்சித்தலைவர்கள் ஆகியோருக்கு இடையே நடைபெற்று வரும் முத்தரப்புப் பேச்சுவார்த்தை கடந்த செவ்வாய் இரவு முதல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் மாநில முதலமைச்சர்களுடன் அமைச்சர்குழு கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் மீண்டும் ஆரம்பித்த முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் பற்றி ஆலோசிப்பதற்காகவே பேச்சுக்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் பி. ஜி. ஜேட்ஜி இன்று தெரிவித்தார்.

மத்திய அரசின் அமைச்சர் குழு ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் முதலமைச்சர்களுடன் ஆலோசிக்கவுள்ளதாகவும், அதன்பின் ஒத்திவைக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடரவுள்ளதாகவும் அமைச்சர் ஜேட்ஜி மேலும் தெரிவித்தார். (உ)

## யாழ். நகரில் பதுக்கியிருந்த மா, சீனி மூடைகள் சிக்கின!

யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 118 மூடை மாவையும் 17 மூடை சீனியையும் விலைக்கட்டுப்பாட்டு குழுவினர் கைப்பற்றினர்.

இரகசியத்தகவலைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்களஞ்சியப்பகுதியிலிருந்துஇம்மூடைகள் கைப்பற்றப்பட்டன.

இக்குழுவில் விலைக்கட்டுப்பாட்டுஉதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு பொறுப்பதிகாரி திரு. எஸ். யேசுதாசன் பரிசோதகர்கள் திரு. ஜெகநாதன் திரு. சிவானந்தன் திரு. நவரத்தினம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (க)

## பண்டைய இந்திய செல்வாக்குப்பற்றிய சோவியத்நூல்

புதுடில்லி, பெப்.9

"பண்டைய இந்திய நாகரிகத்தில் சோவியத் அறிஞர்கள் தனிஈடுபாடு கொண்டுள்ளனர். உலக நாகரிக வரலாற்றில் பண்டைய இந்தியா பெரும் பங்கு செலுத்தியுள்ளது. இன்றைய உலகிலும் இந்தியக் கலாச்சார மரபுகளின் செல்வாக்கு மேன்மேலும் நீடிக்கிறது"

இவ்வாறு "பண்டைய இந்தியா, வரலாற்றுத் தொடர்புகள், கலாசாரத் தொடர்புகளும்' என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலில் கூறப்பட்டுள்ளது. இந்நூலை மாஸ்கோவிலுள்ள சோவியத் விஞ்ஞானக் கழகத்தின், கீழ்த்திசை இயல் ஆய்வுகூடம் உருவாக்கி மாஸ்கோவின் 'நௌகா' பதிப்பாக வெளியிட்டுள்ளது.

இக்கட்டுரைத் தொகுப்பு நூல், பண்டைய இலக்கியத்திலும், ஆரம்பகால கிறிஸ்தவ இலக்கியத்திலும், புத்தமதத்தின் செல்வாக்குப் பற்றியும், பண்டைய இந்தியாவுக்கும் மத்திய ஆசியாவுக்கும் இடையேயுள்ள வரலாற்றுத் தொடர்புகளையும், நெருங்கிய கலாசாரப் பரிவர்த்தனையையும் முக்கிய சான்றுகளுடன் சோவியத் அறிஞர்கள் காண்பித்துள்ளனர். [உ]

## ஜனாதிபதி றீகனின் அமைச்சரவையின் முதல் பெண் அமைச்சர்

வாஷிங்டன், பெ. 9

திருமதி றொபேர்ட்டோல் எலிசபெத் போக்குவரத்து அமைச்சராக அமெரிக்கஜனாதிபதி றீகனின் அமைச்சரவையில் பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி றீகனின் அமைச்சரவையின் முதல் பெண் அமைச்சரான திருமதி எலிசபெத் டோல் தமது பதவிப்பிரமாணத்தை அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதியரசரின் முன்னிலையில் எடுத்துக்கொண்டார்.

போக்குவரத்து அமைச்சராகப் பதவியேற்றுள்ள எலிசபெத் டோல் அமெரிக்கசெனட் நிதிக் குழுவின் தலைவரான றொபேர்ட்டோலின் மனைவியாவார். திரு. டுறூ லுயிஸ் போக்குவரத்து அமைச்சர் பதவியிலிருந்து விலகியமையை அடுத்தே எலிசபெத் பதவி ஏற்றார். (உ)

## காணிப்பிரச்னை இணக்கசபை தீர்த்தது

[புலோலி]

பலவருடகாலமாக ஐந்து குடும்பங்களுக்கு இடையே சச்சரவை ஏற்படுத்திவந்த காணிப்பிரச்னை ஒன்றைப் பொன்னாவெளி கிராமோதய இணக்கசபை மூன்று நாட்களில் சுமுகமாகத்தீர்த்து வைத்தது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வேரவில் என்னும் கிராமத்தில் உள்ள ஒரே சமூகத்தைச்சேர்ந்த ஐந்து குடும்பங்களுக்கு இடையிலேயே இக்காணிப் பிரச்னை சச்சரவை ஏற்படுத்தி வந்தது.

இக்காணிப் பிரச்சினையைக் கவனத்திற்கு எடுத்த பொன்னாவெளி கிராமோதயசபையின் இணக்கசபை மூன்று நாட்கள் விசாரணை மேற்கொண்டதின் [illegible]ாக இக்காணிப்பிரச்னை [illegible] சமரச முடிவு காணப்பட்டது தற்போது சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கிடையே நல்லுறவு ஏற்பட்டுள்ளது.

### மணிவாக்கு

உண்மையை ஒத்துக்கொள்ளும் சக்தி இல்லாதவர்கள் பொய்யைத் தோற்றுவிக்கிறார்கள். நியாயமான உரிமைகளை ஏற்று வழங்காதவர்கள். பொய்யைத் தோற்றுவிக்கிறார்கள். தீய வழியில் செல்வத்தைச் சேர்ப்பதன் மூலம் கள்வர்களைத் தோற்றுவிக்கிறார்கள். அழி பசி தீர்க்கும் பொருள் வைப்புழித் தெரியாத புலலறிவினர்கள் களவினைத் தோற்றுவிக்கிறார்கள்,

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

# நமது நோக்கு

## சமதர்ம சமுதாயம்

இந்தியாவில் சமதர்ம சமுதாயம் காணவேண்டுமென்ற ஆர்வங் கொண்டவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

சீனாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு வந்த அடிகளார் மதுரையில் தமது அனுபவங்களை விளக்கிப் பேசியபோது வெளியிட்ட கருத்துக்கள் எவையும் வியப்பளிப்பவை அல்ல; ஆனால் அவர் அங்கு கண்டதும் கேட்டதும் அவருக்கு அதிசயத்துக்குமேல் அதிசயமாயிருந்தது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

மார்க்ஸ் மாமுனிவரின் சிந்தனைப் போக்குக்கும் அடிகளாரின் சிந்தனைப் போக்குக்கும் உண்டான முரண்பாடு கடவுள் பற்றியது.

கடவுள் பொதுவுடைமைக்கும் சமுதாய மாற்றத்திற்கும் தடையாக இருக்கமாட்டார். மதத்தின் பேரால் சுரண்டுபவர்கள் தான் தடையாக இருக்கிறார்கள் என்பது இந்த முரண்பாட்டுக்கு அடிகளார் அளித்த விளக்கம்.

சமுதாய மாற்றத்திற்கு கடவுள் பயன்படமாட்டாரென்றால் கடவுளை ஒதுக்கி வைத்திடத்தான் தயங்கமாட்டேனென்ற அடிகளார் கொடுத்த அடி சீன கம்யூனிஸ்டுகளுக்குப் புரியாவிட்டாலும் அருள்நெறியில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் சமுதாயத்தை சமதர்ம அடிப்படையில் மாற்றியமைக்க முடியுமென்ற துணிவைத்தெளிவுபடுத்துகின்றது.

உலகில் ஜனத்தொகையில் மிகப்பெரிய நாடாகிய சீனா மிகக்கீழ் நிலையான வறுமையிலிருந்து செழிப்புறும் சிறந்த நாடாகத் திகழவைத்த சீனப்புரட்சியை மெச்சாதார் உலகில் எவருமிலர்.

துறவி ஒருவர் தமது இன்றைய நேரடிப் பயணத்தில் உள்ளத்தையே பறிகொடுத்து விட்டாரென்றால், அங்கு நடந்தேறிய புரட்சி நிலையுள்ள நன்மாற்றங்களை நிரந்தரமாக்கி விட்டதெனலாம். அடிகளார் கம்யூனிஸ்ட் ரஷ்யாவை ஏற்கனவே பார்த்திருக்கிறாரென்பதும் எமது கவனத்துக்குரியது.

கட்டுப்பாடுள்ள சமூகம்; நீதி துலங்குகின்றது: ஒரே வித கோட்பாட்டில் நம்பிக்கை; தனிமனித வழிபாடில்லை; மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் ஒரே மாதிரியான மதிப்பு: பொருட்களுக்கு விலை நிர்ணயம்; வினியோகப் பொறுப்பு அரசிடம்; தனி நபரிடம் கார் இல்லை: கிராம மட்டத்தில், பஞ்சாய ஆட்சிபோன்ற 'கம்யூன்' ஆட்சி: பெண்ணுக்குப் பெருமை; தாய்மொழிக் கல்வி; கூலி ஆட்கள் இல்லை; உணவு, உடை குடியிருப்பு கல்வி சுகாதாரம் போன்ற வசதிகளுக்கு உத்தரவாதம்!

நவசீனத்தின் இன்றைய படத்தை இவ்வாறு வரைந்திருக்கும் அடிகளார் அதிசயத்தில் மூழ்கியது அதிசயம் இல்லை; ஏன்? இவற்றையெல்லாம் சுதந்திர இந்தியாவில் கடந்த 35 ஆண்டுகளாகக் காணவேண்டுமென்று சேவை புரிபவர் அருள்நெறித்தலைவர். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இன்றும் காணப்படும் இடைவெளி இந்த அதிர்ச்சிக்குக் காரணம்! இந்தியாவுக்கு என்றுதான் சமதர்ம ஆட்சி கிட்டுமோவென்ற விசனம்!

எமது நாடு இதற்கு விதிவிலக்கல்ல. தனிமனிதர்களைத் தெய்வமாக்கிவீணாய்க் காலம் கழிக்கின்றோம்! பத்திரிகைகள், வானொலி, ரூபவாகினி இன்றுகண்ணைக் கெடுக்க, காதைப் புளிக்கவைக்குமளவிற்கு பிரசாரம் நடத்துகின்றன; காரில்லாதவன் கணக்கில் சேர்க்கப்படான்; விலைவாசி ஒரு நாளில் மூன்று முறை மாறும்; உடல் உழைப்பு கூலி ஆட்களுக்கே! நான்கு பேர் சேர்ந்து ஒரு கட்சி ஆரம்பிக்கலாம்; கட்சி பெரிது நாடு சிறிது.

முதலாளிவர்க்கமும் நிலப்பிரபுத்துவ வர்க்கமும்வளம் பெறும் ஆட்சியில் பொது மக்கள், ஏழைகள் தலை நிமிர்த்துவதென்றால் முடியாத காரியம்.

கடவுள் வேண்டுவதைக் கொடுப்பார் என்று சொல்வது சமதர்ம கோட்பாட்டுக்கு மாறாக இருக்கலாம்; ஆனால் மனித சமுதாயத்தின் முயற்சிகளுக்குகடவுள் துணையாக விருப்பாரென்பது எங்கள் பண்பாட்டின் சிறப்பு; இதனை உறுதிப்படுத்துவதே அடிகளாரின் கொள்கைச் சிறப்பு.

இந்த நம்பிக்கையில் எவ்வித தளர்ச்சியுமின்றி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற தொண்டில் அயராது தொடரும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குஎமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

### வீமன்காமத்தில் நூல் அறிமுகமும் கருத்துரையும்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறைத்தொகுதி கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றியத்தின் சந்திப்பு வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் ஞாயிறு 13-ந் திகதி பிற்பகல் திருமதி ப. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறுகிறது.

இச்சந்திப்பில் கோகிலா மகேந்திரனின் 'மனித சொரூபங்கள்'' என்னும் நூலின் அறிமுகமும் 'ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்கும், பத்திரிகைகளின் பங்களிப்பும்' என்னும் கருத்துரையும் இடம் பெறுகின்றன.

திருவாளர்கள் என். சண்முகலிங்கம், க. வை. தனேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். [கண்டி. நிரு]

# "சீனாவில் என்றும் ஒரேவிலை! இங்கோகாலை, மாலை ஒவ்வொருவிலை!!"

## தவத்திரு குன்றக்குடிஅடிகளார் சீன அனுபவம்

(மதுரை)

"நமது நாட்டில் காலை ஒருவிலை; மாலை ஒருவிலை! ஆனால் சீனாவில் கடந்த ஐந்தாண்டுக்கு மேலாக விலைவாசி ஒரேஅளவில் இருக்கிறது. ஆனால் இங்கோ விலைநிர்ணயம் அரசிடம் கிடையாது. சுரண்டல் கும்பலிடம்தான் இருக்கிறது''

சமீபத்தில் சீனதேசம் சென்று வந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் மேற்கண்ட அனுபவத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

இங்கு வீட்டை விட்டு வெளியே வந்தால், உடனே கார் கேட்போம். நானும் அப்படித்தான்! இதே போல் நானும் கார்கேட்டேன். அங்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குச் செல்வதானால், கார் கிடைக்காது. நடந்துதான் செல்லவேண்டும்! இந்த விபரங்களை என்னிடம் சொன்னார்கள்.

### சீனாவில் பெண்கள்

"சீனாவில் பெண்களுக்குப் பெருமையளிப்பதைப் பார்த்தேன். பெண்கள் அங்கு கூச்சமின்றித்தெருவில் நடக்கிறார்கள். கற்புக்கு ஆபத்தில்லை! தெருக்களில் பெண்கள் தேகப் பயிற்சி செய்கிறார்கள். அவர்களை எவரும் வேடிக்கை பார்ப்பதில்லை. அவரவர் வேலையில் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

சீன நாட்டுப் பெண்கள் பழமையில் மூழ்கிக்கிடக்கவில்லை. பழமையைப் பற்றிப் பேச்செடுக்கும்போது, "நாங்கள் இரண்டு காலில் நடக்கிறோம்'' என்கிறார்கள். அதாவது பழமை என்ற காலிலும், புதுமை என்ற காலிலும் நடப்பதாகச் சொன்னார்கள். 'பழையதைவிட்டுத்தள்ளு', என்கிறார்கள். ஆனால் நாமோ இராமன் நல்லவனா, இராவணன் நல்லவனா என்று வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.

கடவுள் நம்பிக்கை பொதுவுடமைச் சமுதாயத்திற்குத் தடையாக இருக்கமுடியாது. உனது முயற்சிகளுக்குக் கடவுள் துணையாக இருக்கிறார் என்று சொல்கிறோமே தவிர, கடவுள் கொடுப்பார் என்று சொல்லவில்லை. கொடுப்பார் என்று சொல்வது 'பிஸினஸ்' ஆகும்.

### சிந்தனைப் போக்குகள்

மார்க்ஸிய சிந்தனைப்போக்குகளுக்கும், எனது சிந்தனைப் போக்குகளுக்கும் முரண்பாடு இருக்கிறது. நான் கடவுளை நம்புகிறேன். கடவுள்சமுதாய மாற்றத்துக்குப் பயன்படுவாரா? பயன்படமாட்டாரா என்ற கேள்வி எழக்கூடும், பயன்படமாட்டார் என்றால், கடவுளை ஒதுக்கிவைத்திட நான் தயங்கமாட்டேன்.

# யாழ். மாநகரமும் இன்றைய அதன் நிலைமையும்

க. கணேசலிங்கம்

யாழ். மாநகரின் அழகை அனுபவிக்க விரும்பும் ஒருவர் அரைவாசிக் காற்று நிரப்பப்பட்ட சைக்கிளில் ஒருமுறை நகர் வீதிவலம் வந்தால் யாழ். மாநகரம் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்துள்ளது, என்பதனை மிக நன்கு புரிந்து கொள்ளலாம்.

மே மாதத்தில் இங்கு போட்டியிட விரும்பும் அபேட்சகர்கள் மேடையில் நின்று அதிகம் மினக்கெடாமல் இவ்வித சுற்றுலா ஒன்றை மேற்கொண்டால் யாழ். மாநகரத்துக்கு எது எது தேவையென்பதற்கான ஒரு விரிவான திட்டத்தை, புதிய திட்டத்தைத் தயாரித்து செயல்படுத்த மிக்க உதவியாக இருக்கும்.

ஏதோ சாபக்கேடு போல் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கொடும் தீ வைப்புக்களும் நகரின் அழகை இடையிடையே சுட்டுப் பொசுக்கி விட்டன.

ஒரு சந்ததியின் அறிவையே கொளுத்தி நாசமாக்கி விட்டது தீ. அழகையும் அறிவையும் சேர்த்து நாசமாக்கி விட்டது. புதிய பொது நூல் நிலையத்தைக் கட்டியெழுப்ப இன்னும் எத்தனை நாட்கள் ஆகப் போகின்றனவோ?...

எல்லா நகரங்களும் செம்மை பெற்று, சீர்பெற்று திட்டமிடப்பட்டு உயர்ந்து உருப்பெற்று வரும்போது நமது நகரம்மட்டும் ஏன் இன்னும் தரத்தில் உயரவில்லை? கேள்விக்குப் பல பதில்கள் இருக்கலாம்...

இந்த நகரை அபிவிருத்தி செய்வதற்கு காலத்துக்குக் காலம் பெரிய மிகப் பெரிய திட்டங்கள் போடப்பட்டன. ஆனால் காலம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது, இதன் காரணமாக எந்தத் திட்டங்களும் இங்கு செயல்படுத்த முடியாதபடி குறுக்குச் சுவர்கள் பல முளைத்துத் தடுத்து விட்டன, இன்னும் தடுத்து விடலாம்.

நினைத்த இடங்களில் கட்டடங்கள் யாரிடம் அனுமதி பெறுகின்றார்களோ? என்று குழம்ப வைக்கின்றது.

வீதிகள் குறுகுகின்றன. விபத்துக்கள் பெருகுகின்றன வசதிக்காக உருவாக்கப்பட்ட நகரங்கள் வாழ்வின் அகால முடிவுகளுக்கு வழி கோலுகின்றன. அக்கறையின்மை, அசட்டை அறியாமை உதாசீனம், வீண் இழுபறிகள் தேவையற்ற வகையிலமைந்த தனிப்பட்ட செல்வாக்கு (சுவரை முன்பிருந்த இடத்திலிருந்ததைவிட முன்னுக்குக் கட்டுவதற்குக் கூடப் பெரிய அரசியல் வாதிகளைத் தேடும் வழக்கம்) பொறுப்பின்மை, வெறும் சுயநலம், திட்டமின்மை இவையெல்லாம் சேர்ந்து யாழ்ப்பாண மாநகரை, யாழ். மாநகரின் அழகை, நல்ல அமைப்பை நாளாந்தம் பாழ்படுத்திச் சிதைத்துக் கொண்டு வருகின்றன.

வெள்ளம் அணைகடந்து போய்க் கொண்டிருக்கிறது.

'எவ்வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? என்று கவிஞர் கண்ணதாசன் பாடியது போல் இங்கு நிறைய வளங்கள் இருக்கின்றன. மிகவும் திறமைசாலிகள் நிறைய இருக்கின்றார்கள். ஆனால் இங்கு தற்போது இல்லாதிருப்பது ஒழுங்கு.

இடது பக்கம் போ என்றால் வலது பக்கம் போபவர்களும் வலது பக்கம் போ என்றால் இடது பக்கம் போபவர்களும் அதிகரித்துக் கொண்டுவருகின்றார்கள்.

நெதர்லண்ட்ஸில் ஒரு சாதாரண நாய்கூட வீதி ஒழுங்குகளைக் கவனித்தே செல்லுமாம். அங்கு சென்று திரும்பிய நண்பர் ஒருவர் சொன்னார்.

இப்போது தமது நகரின் அழகைக்கண்டுரசிக்கநிறைய மேல்நாட்டு உல்லாசப்பிரயாணிகளும் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண மாநகரின் மக்கள் தொகை தற்போது உண்மையில் வெகுவாக அதிகரித்துவிட்டது இதன் காரணமாக பலவிதபுதுப்பிரச்னைகள் மூச்சுவிட சரியான இடம் கிடைப்பதில்லை. குடியிருக்க சாதாரண மகனுக்குநிலமில்லை

பிச்சைக்காரர்கள் பசியோடு நகரின் மத்தியிலுள்ள தலைவர்களின் சிலைகளின் கீழ் படுத்துறங்குகின்றார்கள்.

யாழ்ப்பாண மாநகரத்துச் சுகாதாரம் நோயாளியாகப் படுத்துக்கொண்டு விட்டது. குப்பைமேடுகள் உயர்ந்து கொண்டு கூக்குரல் போடுகின்றன.

இந்த மோசமான நிலைக்கு நாம் எல்லோருமே மிக நன்றாக ஒத்துழைத்து விட்டோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை மீறல்

# நஷ்டமும், செலவும் வழங்க உத்தரவு

(கொழும்பு

அரசியல் அமைப்பின் அத். 14. (1) 9 குறிக்கும் அடிப்படை மனித உரிமையை மீறி ''பாவித்தி ஹன்ட்'' துண்டுப் பிரசுரங்களைப் பறிமுதல் செய்து தமது எடுத்துச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரங்களை தடுத்த உயர் நீதிமன்றத்தில் தாக்கலான வழக்கில் கம்பஹா பொலிஸ் சுப்பிரிண்டன்ட் பி. உடுகம்பொல பனுதாரரான வண. தர்மித்திபொல ரட்ணஸரா தேரோவுக்கு நஷ்டயீடாக 10,000 ரூபாவும் செலவுத் தொகையாக 2,100 ரூபாவும் செலுத்தும்படி ஐந்து நீதியரசர்களும் ஏகமனதாக உத்தரவிட்டுள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் தனது எழுத்துச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரம் ஆகியவற்றில் தலையிட்டுத் தடைசெய்து அரசியல் மனித அடிப்படை உரிமையை மீறியமைக்காக கம்பஹா பொலிஸ் சுப்பிரிண்டன்ட் பி. உடுகம்பொல, பொலிஸ் மா அதிபர் ருத்திரராஜசிங்கம் ஆகிய மூவருக்கு எதிராக வண. ரட்ணஸார தேரோ தாக்கல் செய்த வழக்கிலேயே நீதியரசர்களான டி. விமலரட்ண, பி. எஸ். சி. ரத்வத்தை, பி. கொலின்தோமே, எம். எம். அப்துல் ஹாதர், எச். ரொட்றிகோ ஆகியோர் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளனர். (இ)

காங்கேசன் சிமெந்து 3ம் கட்டப்பிரிவால்

# மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க ஒப்பந்தம் ரத்து!

(மாவிட்டபுரம்)

ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு வழங்கிய கிராம அபிவிருத்திச் சங்கங்களில் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஒப்பந்தம் காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவினரால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவிற்கு மாவிட்டபுரம், மல்லாகம், வதிரி, ஊறணி, வல்வெட்டி, தையிட்டி ஆகிய 6 கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு வழங்கியிருந்தன.

இதில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மேற்படி 3ம் கட்டப் பிரிவினர் இரத்துச்செய்துள்ளனர்.

இதன்காரணமாக இச்சங்கத்தின் சார்பில் தொழில் புரிந்த சுமார் 500 தொழிலாளர்கள் வரையில் வேலை இழந்தபோதும், அவர்களை வேறு சங்கங்களுக்கூடாக வேலைக்கு சேர்த்துக்கொள்ள 3ம் கட்டப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சம்பளப் பிரச்னை தொடர்பாக தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. [வெ]

# கத்தியைக் காட்டி மினிவானைக் கடத்தினர்!

## இளைஞர்களைத்தேடி வேட்டை

(மன்னார்)

இனம்தெரியாத 4 இளைஞர்களினால் கடத்திச்செல்லப்பட்ட 'மினி' வான் ஒன்று அடம்பனில் ஒரு வீதியில் அனாதரவாக கைவிடப்பட்டிருந்தது!

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முகமட் சுல்தான் தாசிம் என்பவருக்குச் சொந்தமான 34 சிறீ 9405 என்ற இலக்கமுடைய வானே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் கடத்திச்செல்லப்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கடத்திச் செல்லப்பட்ட வானின் உரிமையாளர் தமது பிள்ளைகளை மன்னாரிலுள்ள படமாளிகை ஒன்றில் படம் பார்ப்பதற்கு விட்டுவிட்டு வானுடன் மன்னார் பஸ்நிலையத்தில் நின்றார்.

அச்சமயம் அங்கு வந்த 4 இளைஞர்கள் வங்காலைக்குப் போவதற்கு வாடகைக்கு வானைவிடமுடியுமா எனக் கேட்டனர்.

வானின் உரிமையாளரும் வங்காலைக்குப் போவதற்கு சம்மதித்து 4 இளைஞனையும் ஏற்றிக்கொண்டு வானை வங்காலைக்குச் செலுத்திக்கொண்டிருந்தார்.

வான் தள்ளாடி சந்தியைத் தாண்டி திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லுமிசந்திக்கு வந்ததும் வானில் பயணம் செய்த 4 வாலிபர்களும் கத்தியைக் காட்டி வானின் உரிமையாளரைப் பயமுறுத்தி வானை நிறுத்தச்செய்தனர்.

வான் நிறுத்தப்பட்டதும் 4 இளைஞர்களும் வானின் உரிமையாளரைப் பலமாகத் தாக்கி கீழே தள்ளிவிட்டு வானைக் கடத்திச் சென்றனர்.

இச்சம்பவம்பற்றி வானின் உரிமையாளர் உடனடியாக மன்னார் பொலிசில் புகார் செய்தார்.

இவ் வான் கடத்தல் பற்றி மன்னார் பொலிசார் சகல பொலிஸ்நிலையங்களுக்கும் தள்ளாடி இராணுவமுகாமிற்கும் தகவல் கொடுத்துவிட்டு பலத்த தேடுதல் வேட்டை நடத்தினர்.

இறுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் அடம்பன் வீதியில் அனாதரவானநிலையில் கைவிடப்பட்ட வானை மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

கடத்திச் செல்லப்பட்ட வானில் உள்ள கைரேகைகளை கைரேகை நிபுணர்கள் பதிவு செய்தனர். இவ் வானை கடத்தியதன் காரணத்தையும், கடத்திய 4 இளைஞர்களையும் கண்டுபிடிப்பதில் மன்னார் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் தலைமையிலான பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## "சுதந்திரமாகக் கூறமுடியாது" பாலாலி

(புலோலி)

"சிறுபான்மைத் தமிழர்களின் சமூகக்குறைபாடுகளை எடுத்து உரைப்பதற்கு பாராளுமன்றத்தில் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதி ஒருவருமே இல்லை. ஒரு கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் அக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைச்சமூக எம்பியால் சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரச்சினைகளைச் சுதந்திரமாகக் கூறமுடியாது."

இவ்வாறு யாழ். சன்மார்க்க ஐக்கிய இளைஞர் இயக்கச் சனசமூக நிலையத் தலைவர் திரு. ஆ. மாணிக்கம் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் சுட்டிக்காட்டி உள்ளார்.

# "தாயுமானவர் நெறி தரணியை உய்விக்கும்"

[யாழ்ப்பாணம்]

உலகம் கண்ட ஒப்பற்ற ஞானியருள் தலையானவர் தாயுமானவர். தாயுமானவர் நெறி தரணியை உய்விக்கும் நெறியாகும் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைச் செயற்படும் வழியிற் காட்டியவர் அவர் அன்னாரது நினைவை ஆண்டு முழுவதும் கொண்டாடுவோம்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற தாயுமானவர் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு. இ. சபாலிங்கம் இவ்வாறும் கூறினார்.

விசேட பிரார்த்தனை பூசையுடன் ஆரம்பமான தாயுமானவர் விழாவில் வரவேற்புரை வழங்கிய சபை அமைச்சர் சைவப்பெரியார் மு. மயில்வாகனம் தாயுமானவர் தவநெறி இயற்கையொடமைந்த ஒப்பற்ற நெறி என்றார். சித்தாந்த வித்தகர் சே. க. சண்முகம்பிள்ளை உரையாற்றும் பொழுது தாயுமானவர் சைவசமய நுட்பங்களை எளிதிலே விளங்கியமை குறிப்பிடத்தக்கது என்றார்.

சிவஸ்ரீ கந்த சாம்பசிவக் குருக்கள் தாயுமானவரின் திருப்பாடல்கள் வேத ஆகம புராண இதிகாச சாரமாய் எவர்க்கும் எளிதிலே விளங்கத்தக்கவையாய் உள்ளன என்றார். சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை பண்டிதர் செ. சிவப்பிரகாசம், சிவபூஜாதுரந்தரர் மு. நமசிவாயம் ஆகியோரும் தாயுமானவரின் பாடற்சிறப்புக்களைப் பலவாறு எடுத்துக்காட்டி உரையாற்றினர்.

திரு. மு. நமசிவாயம், சிவநெறித்தொண்டர் நா. இரகுநாதன், திருப்பூங்குடி க. ஆறுமுகம் ஆகியோரின் துதிப் பாடல் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## நடவடிக்கை

[மன்னார்]

மன்னார் ஆட்காட்டிவெளி பகுதி விவசாயிகளின் நலன் கருதி அடம்பன்- ஆட்காட்டிவெளி பிரதான வீதியை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை ஆட்காட்டிவெளி பங்குத் தந்தை அருட்திரு சூசைப்பிள்ளை மன்னார் எம்.பி. திரு. பி.எஸ் சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை ஆகியோரிடம் சமர்ப்பித்துள்ளார்.

## பாலர் பாடசாலை

(மாவிட்டபுரம்)

வசதிகுறைந்த பிள்ளைகளுக்கு குறைந்த செலவில் கல்வி புகட்டுவதற்காக மாவிட்டபுரம் மடத்தடி ஒழுங்கையில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க 33ம் இலக்ககிளைக்கு, மகளிர் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டின் பேரில் அமைக்கப்பட்ட இப்பாலர்பாடசாலையை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா ஆரம்பித்து வைத்தார்.

இதற்கான ஒழுங்குகளை சமாதான நீதிபதி திரு. மு. முத்துலிங்கம், கிளைக்குழுத் தலைவர் திரு. ம. இராமகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## இடநெருக்கடி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தில் பலத்த இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இங்கு வகுப்பறைகள் கள் பற்றாமலிருப்பதால் விஞ்ஞான கூடம், மனையியல் கூடம் ஆகியவற்றிலும், கட்டிட விறுந்தைகளிலும் வகுப்புகளை நடத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் புதிய வகுப்பறைக் கட்டிடங்களை நிறுவ பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி அலுவல்களை கவனித்துவரும் யாழ் எம்.பி திரு: வி. யோகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## பரு. நகரசபை கூட்டத்திலிருந்து

# வெளிநடப்புச் செய்தமைக்கு விளக்கம்

[யாழ்ப்பாணம்]

மக்களால் நகரசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட நாம் மக்களின் நன்மைகருதி கேட்டகேள்விகளுக்குச் சரியான பதில்கிடைக்காத சபையில் உறுப்பினர்களாக இருப்பதனால் எதுவித பலனும் இல்லை என்ற படியினாலே சபையைவிட்டுவெளி நடப்புச் செய்தோம்.

இவ்வாறு, பருத்தித்துறை நகரசபைக் கூட்டத்தில் வெளிநடப்புச்செய்த சுயேட்சைக் குழு உறுப்பினர்களான திரு. மு. பொ. வீரவாகு, திரு சிவாகிருஷ்ணமூர்த்தி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை நகரசபையின் ஜனவரி மாதக்கூட்டம் பெப்ரவரி மாதம் 2ம் திகதி நடைபெற்றது. ஜனவரி மாதம் 27ம் திகதி நடைபெறவேண்டிய கூட்டம் பெப்ரவரி மாதம் 2ம் திகதி நடைபெற்றது சட்டத்திற்கு முரணானது என்று சுட்டிக்காட்டினோம்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவரும் சமூகமளிக்காத கூட்டத்தில் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முறையற்ற நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி, இந்நியமனத்திற்குரியவர்களின் கோவைகளை நாம் பார்வையிடவிரும்புகிறோம். இதற்கு அனுமதி தர வேண்டும் எனக்கோரினோம்.

இவ்வாறு உள்ள பிழைகளை நாம் சுட்டிக்காட்டியதும் தலைவரும், உறுப்பினர் ஒருவரும் மிக ஆத்திரமடைந்து எமக்கு அங்கத்தவர்களுக்குரிய கௌரவம் அளிக்காமல் சபையில் பயன்படுத்த முடியாத வார்த்தைகளைப் பிரயோகித்தனர்.

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் என்ற முறையில் மக்களின் நன்மை கருதி கோரிக்கைகளுக்குச் சரியான பதில் கிடைக்காத சபையில் உறுப்பினர்களாக இருப்பதனால் எதுவித பயனும் இல்லை என்ற படியாலும் எம்மை அவமதிப்பதனைத் தாங்கிக் கொள்ள முடியாமையினாலுமே நாங்கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தோம். (பு நி)

# பனம்பொருள் மகாநாடு பூர்வாங்க ஏற்பாடுகள்

(ஏ. வி. மாணிக்கம்)

பனம்பொருள் தொழிற்பாட்டு மகாநாடு இம் மாதம் 21ம் திகதி தொடக்கம் 5 நாட்களுக்கு நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை, பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா மேற்கொண்டுள்ளார்.

ஐ. நா. சபையின் உணவு விவசாய நிறுவனம், பனம்பொருள் அபிவிருத்தி சபையின் விருப்பத்துக்கிணங்க யாழ் நகரில் பனம் பொருள் தொழிற்பாடு மகாநாட்டை நடத்துகின்றது.

இம் மகாநாட்டில் இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும், இலங்கைப் பிரதிநிதிகளுமாக 100 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் ஆறு ஆய்வுப் பத்திரிகைகள் வாசிக்கப்படும்.

"உயிரியலும் தாவரவியலும்" இலங்கை மக்களின் பனம்பொருள் பாவனையும் குறைபாடுகளும் "பதனீர் உற்பத்திப் பொருட்கள், பதனீர் தவிர்ந்த ஏனைய பனை உற்பத்திப்பொருட்கள்", "சந்தைப்படுத்தலும் ஏற்றுமதியும்", "பனை அபிவிருத்தி விரிவாக்கம். இந்த ஆறு விடயங்களை உள்ளடக்கியதாகக் கருத்தரங்குகள் நடைபெறும்.

இம்மாதம் 21, 22, 23ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மகாநாடு நடைபெறும். அடுத்து 24, 25ம் திகதிளில் நாடு பிரதிநிதிகளும் பனைவளம் உள்ள இடங்களில் ஆய்வுச் சுற்றுலாவை மேற்கொள்வர். (மா)

## குத்தரிசி விலை வீழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

நெல் அறுவடையையடுத்து இப்பகுதியில் அரிசியின் விலை சரிந்து வருகின்றது. கிலோ 7-50 தொடக்கம் 8 ரூபாவரை விற்கப்பட்டு வந்த குத்தரிசி தற்போது கிலோ 6-25 தொடக்கம் 7 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்ககடைகளில் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சைஅரிசி கிலோ 5-75 ஆக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தனியார் கடைகளில் இந்த அரிசி 5-90 ஆக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

## யாழ். மாநகர

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையை மாற்றி அழகான, விசாலமான, திட்டமிடப்பட்ட, சுத்தமான யாழ். மாநகரை நாம் சிறந்த முறையில் கட்டியெழுப்புவதென்றால் முதலில் நகரிலுள்ள நாம் ஒவ்வொருவரும் சிறிதளவாவது திருத்தியேஆகவேண்டும்.

அடுத்தது நமது யாழ். மாநகரசபைக்கு நமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்பவர்கள் விஷயத்தில் சிறிதாவது கவனம் செலுத்த வேண்டும். உண்மையான அக்கறை, சிறந்ததிட்டம், செயல்திறன் உள்ளவர்களே அங்குசெல்லக்கூடியதாக நாம் மிக்க அவதானமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் இதுவும் நமதுமிகப்பெரிய கடமை.

புதியதோர் நகரம் செய்வோம்!

# "புறக்கணிப்புகளிலிருந்து மீள எமக்குப் பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டும்!"

– அமிர்தலிங்கம்

(மாவிட்டபுரம்)

மாவட்ட அபிவிருத்திச்சபை மூலம் சொற்ப அதிகாரம் எமக்கு கிடைத்ததையடுத்து 60-ம் ஆண்டு முதல் நாம் வற்புறுத்தி வந்த மகாதேவா பாலத்தை இன்று அமைத்து முடிக்க வழி பிறந்துள்ளது. இதுவரை 2000 அடிக்கு கடலில் வீதி போடப்பட்டுள்ளது. இன்னும் 400 அடி வரையிலேயே மீதி இருக்கிறது. அதுவும் ஏப்ரல், மே மாதங்களில் பூர்த்தியடைந்து விடும். இப்பாலத்தின் மூலம் எமது மக்கள் பெரு நன்மையடைவார்கள் என்பது திண்ணம்."

இவ்வாறு மாவிட்டபுரம் கிளானை வளர்மதி சனசமூக நிலைய 15-வது ஆண்டு நிறைவுவிழா நிலைய முன்றலில் நடந்த சமயம் அதில் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை அதிபர் திரு. மூ. நடராஜா தலைமையில் இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இளைஞர்களது சக்தி வீணாக்கப்படக்கூடாது. அவர்கள் வீண் நேரத்தை போக்காமல் பொதுப்பணிகளில் ஈடுபட வேண்டும். கிராம வளர்ச்சிக்காகவும், அதற்கும் மேல் இனத்தின் வளர்ச்சிக்காகவும் அவர்கள் தொண்டாற்ற வேண்டும். பொதுப்பணிகளில் ஈடுபடும்போது உண்மை, நேர்மை என்பவற்றை கடைப்பிடிக்கவேண்டும்.

தீவிரவாதிகள் என்று கூறும் சிலர் எம்மைப் பார்த்து "விடுதலை பற்றி பேசியவர்கள் இன்று அபிவிருத்தி பற்றி பேசுகிறார்கள்" என கிண்டல் செய்கிறார்கள். மக்கள் நன்றாக வாழ்ந்தாலே விடுதலை என்ற இலக்கையடைய முடியும் என்பதை அவர்கள் உணரவேண்டும். நாம் எமது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளை எமது மக்களின் தேவைகளையும் நிறைவேற்றி வருகிறோம். இரண்டிற்கும் முரண்படாமல் செயலாற்றி வருகிறோம்.

## அபிவிருத்திக்கு அரசின் ஆதரவு வேண்டும்.

அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் ஆதரவு வேண்டும். ஆகவே அரசாங்கத்துடன் இணைந்து செயல்படவேண்டுமென நினைப்பது தவறு. கிழக்கு மாகாணத்தில் தேவநாயகம், இராசதுரை போன்றவர்கள் அபிவிருத்திக்காக அரசுடன் சேர்ந்திருந்தும் எங்களை விட அதிகமாக என்ன சாதித்துவிட்டார்கள்? கிழக்கில் சூறாவளியால் பாதிப்புற்ற பாடசாலைகள் இன்னும் ஓலைக் கொட்டில்களிலேயே இயங்குகின்றன. ஆகவே அபிவிருத்திக்காக அரசுடன் இணைந்து செயல்படவேண்டும் என நினைப்பது தவறு. எமது கையில் அதிகாரங்கள் கிடைக்கும்போதே அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியும்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை கைப்பற்றியதன் மூலம் எமக்கு சொற்ப அதிகாரம் கிடைத்துள்ளது. அதன் மூலம் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறோம். பூரண அதிகாரம் எமது கையில் கிடைத்தால் மேலும் எமது பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியும்.

## தமிழ் பகுதிகள் புறக்கணிப்பு

எமது தமிழ் பகுதிகள் என்றும் புறக்கணிப்பட்டே வந்துள்ளன. ஆங்கிலேயர் காலத்திலும் அவர்கள் கொழும்பிலும் மலையகத் தோட்டப் பகுதிகளிலுமே தமது வருமானத்திற்காக அபிவிருத்திகளை மேற்கொண்டனர். பின்னர் சிங்கள ஆட்சியாளர்களும் தமது பகுதிகளையே அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுவருகின்றனர். குருநாகல் மாவட்டத்தில் உலகவங்கி உதவியுடன் 45கோடிரூபாசெலவில் அபிவிருத்திவேலைகளை மேற்கொண்டுள்ளார். ஏனைய மாவட்டங்களிலும் நோர்வே, சுவீடன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் உதவிபெற்று அபிவிருத்திவேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் எமது பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை நமது பகுதியில் பெரியதோர் அபிவிருத்தித் திட்டமாக விளங்குகிறது. இங்கு வேலைவாய்ப்பில் எமது மக்களுக்கே முன்னுரிமையளிக்கவேண்டுமென வற்புறுத்திவருகிறோம். தொழிற்சாலைக்கென காணிகளை வழங்கியும், தொழிற்சாலை தூசியால் பாதிக்கப்பட்டும் கஷ்டமுறும் எமது மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது அவசியமென ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கூட வலியுறுத்தத் தயாராய் இருக்கிறோம்.

## எவரையும் அரசு அனுப்பவில்லை

தொழில் அமைச்சு மூலம் வெளிநாட்டுக்கு தொழிலாளர்களை அனுப்ப எம். பீக்களிடம் 15 பேரை தருமாறு கேட்கப்பட்டது. நாமும் அவ்வாறு ஆட்களை வழங்கினோம். ஆனால் தென்பகுதி எம். பீக்கள் ஒவ்வொருவரும் கொடுத்த 100க்கு மேற்பட்டவர்கள் வெளிநாட்டுக்கு சென்றுவிட்டனர். ஆனால் நாம் கொடுத்த 15 பேரில் எவருமே அனுப்பப்படவில்லை. ஆகவே இவ்வாறான புறக்கணிப்புகளிலிருந்து நாம் மீளவேண்டுமானால் எமது கையில் பூரண சுதந்திரம் கிடைக்கவேண்டும். அதற்கான பாதையில் ஒற்றுமையாக நாம் முன்னெடுத்துச் செல்வோம்" என்றார்.

மற்றும் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா, காங்கேசன்துறை மின்சாரசபை உதவி பொறியியலாளர் திரு. பி. சிவப்பிரகாசம், மின்முகாமி திரு. எஸ். கருணாமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

"வீரபாண்டிய கட்டப்பொம்மன்" படமும் காண்பிக்கப்பட்டது.

# வறுமையினால் தற்கொலை

(மாவிட்டபுரம்)

குடும்பக் கஷ்டத்தால் விரக்தியுற்ற ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்து கொண்டார்.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த ஐயாத்துரை பத்மநாதன் (34 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவராவார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. கே. உலகநாதன் இம் மரணம் குறித்து விசாரணை நடத்தியசமயம் காலமானவரின் மனைவி சந்திரகுமாரி, அயல்வீட்டுக்காரர் கே. கமலசேகரன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

5 பிள்ளைகளைக் கொண்ட இக் குடும்பத்தில் கஷ்டம் நிலவியதால் காலமானவருக்கும் மனைவிக்குமிடையில் அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டுவந்ததாகவும் அத்துடன் காலமானவர் குடிப்பழக்கமும் உள்ளவரெனவும் கூலிவேலை செய்துவந்தவரெனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் உத்தியோகத்தர் கந்தசாமி நிர்மலகுமார் விசாரணைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். [அ]

# இளம் பெண்மீது பலாத்காரமுயற்சி

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் வீட்டில் தாயாருடன் நித்திரையிலிருந்த இளம் பெண் ஒருவரை பலாத்காரம் செய்ய முற்பட்டதாக குற்றம்காட்டி சுன்னாகம் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட வாலிபர் ஒருவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது பதில் நீதிபதி திரு கே.குணரத்தினம் அவரை எதிர்வரும் 15ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

உடுவில் ஆலடி என்னுமிடத்தைச் சேர்ந்த பெண் தமது தாயாருடன் இரவுவேளை தமது வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது நள்ளிரவில் மேற்படி வாலிபரான குருநகரைச் சேர்ந்த சேவியர் பாலசிங்கம் ஹனிசியஸ் என்பவர் வீட்டில் புகுந்து அவரை பலாத்காரம் செய்ய முற்பட்டதாகவும், இதனால் அவர் குளறிக் கூக்குரலிட்டதாகவும், தாயாரும் சத்தம் கேட்டு எழும்பிக் குளறிக் கூக்குரலிட்டபோது அயலவர்கள் சத்தம் கேட்டு அவ்விடத்திற்கு ஓடிவந்ததாகவும், அவர்களைக் கண்டு இவ்வாலிபர் தப்பி ஓட முயற்சிக்கையில் அவர்கள் துரத்திச் சென்று அவரை மடக்கிப்பிடித்து சுன்னாகம் பொலிசில் ஒப்படைத்ததாகவும் நீதிமன்றத்தில் பொலிசார் நீதிபதியிடம் தெரிவித்தனர்.

பதில் நீதிபதி திரு கே. குணரத்தினம் அவரை இம்மாதம் 15ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மல்லாகம் சட்டத்தரணிகளும் கண்டனம்

[பண்டத்தரிப்பு]

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. எல். திலகனை கடந்த மாதம் 17ம் திகதி இரவு இராணுவத்தினர் அவமதித்து கௌரவக்குறைவாக நடாத்திய செயலை பலமாகக்கண்டித்துள்ளதுடன், இனிமேல் வீதிகளில் பாதுகாப்புப் படையினர் வாகனங்களை சோதனையிடும்போது தனியாரின் கௌரவத்தை அனுசரித்து நடக்கவும். அவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தாது பார்த்துக்கொள்ளவும். ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவை தீர்மானம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நூலக அறையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியை அவமதித்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை கேட்பதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி கே. குணரத்தினம் இத் தீர்மானங்களை ஜனாதிபதி, பிரதமர், பிரதம நீதியரசர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

# "பெரியவர்கள் ஆலோசனையின்றி சமுதாயம் முன்னேற முடியாது"

## முதியோர்தின விழாவில் பேச்சு

[கரவெட்டி]

இன்று சமுதாயத்தை வழி நடத்திச் செல்வதற்கு இளைஞர் சமுதாயம் துடிக்கிறது. இதனால் சமுதாயத்தை வழி நடத்திக் கொண்டிருக்கும் பெரியவர்களை ஒதுங்கும்படி கோரப்படுகிறது. அனுபவமும் ஆற்றலும் மிக்க பெரியவர்களது ஆலோசனையின்றி சமுதாயத்தை நல்ல முறையில் வழி நடத்திச் செல்ல முடியாது என்பதை இளைஞர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்"

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து கரணவாய் வடக்கு கிராமோதய சபையினால் நடாத்தப்பட்ட முதியோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கரணவாய் தாமோதர வித்தியாலயத்தில் கிராமோதய சபைத்தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. தம்பிமுத்து மேலும் பேசுகையில்

எத்தனையோ பெரியார்கள் தமது வாழ்க்கை காலத்தில் சமுதாயத்திற்காக தம்மை அர்ப்பணித்து அரும் பெரும் சேவைபுரிந்துள்ளார்கள் அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றுவதற்கு இப்படியாக முதியோர் விழாக்கள் கொண்டாடப்படுவது அவசியம்.

இளைஞர் சமுதாயத்தினர் இன்று தாமே சமுதாயத்தைக் கொண்டுநடத்த வேண்டும் என்று துடிக்கிறார்கள். அதனால் பெரியவர்களை குறிப்பாக சமுதாய முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ளவர்களை விலகிக் கொள்ளும்படி கேட்கிறார்கள். துடிப்பிற்கேற்ப அவர்கள் கேட்பது நியாயமாகத்தான் இருந்தாலும் அனுபவம் ஆற்றல் மிக்க பெரியவர்களின் ஆலோசனை இன்றி எதனையும் செய்துவிட முடியாது என்பதை இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் பெரியவர்கள் தமது காலத்தில் எத்தனையோ அனுபவங்களை கஷ்டங்களை உணர்ந்தவர்கள் கண்டவர்கள் எனவே இளைஞர்கள் பெரியோர்களுடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

எமது சமுதாயத்தில் எத்தனையோ முதியோர்கள் தமது இறுதிக் காலத்தில் கஷ்டப்பட்டு வருவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. இப்படியான நிலைக்கு முதியோர்களை நாம் விட்டுவிடக்கூடாது. அவர்களுக்கு பாதுகாப்பளித்து காப்பாற்ற வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே கிராமங்கள் தோறும் முதியோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இச்சங்கங்கள் மூலம் முதியோர்களது தேவைகளை ஆராய்ந்து தீர்வு காண முடியும்" என்றார்.

இவ்விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். உடுப்பிட்டி கல்விவட்டார அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. ச. தாமோதரம் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை கரணவாய் வடக்கு விசேட சேவை உத்தியோகத்தர் திரு. சு. செல்வநாதன் உட்படபலர்கலந்துகொண்டனர்.

விழாவிற்கு அழைக்கப்பட்ட முதியோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

# "நடவடிக்கை எடுக்கப்படும்"

(மன்னார்)

கிராமோதய சபைகளுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு கிராமோதய சபை உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு பி. எம். செபமாலை தெரிவித்தார்.

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு வி.முருகையா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மன்னார் அரசாங்க அதிபர் திரு ஏ ஜே செந்தில்நாதன், நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கம், மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு வி. கைலாசபிள்ளை அடம்பன்பிரதேசசபை தலைவர் திரு எஸ்.சௌந்தரநாயகம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதிய மெருகு பெற்றுள்ள பாடசாலை

(பண்டத்தரிப்பு]

பிரான்பற்று அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட தீவிர முயற்சியினால் கிராம மக்களிடையே சுமார் 50 ஆயிரம் ரூபாவரை அன்பளிப்பாக சேகரிக்கப்பட்டு கட்டிட திருத்த வேலைகள் நடைபெற்றதுடன் பாடசாலையைச் சுற்றி மதில் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. இரும்புக் கேற் ஒன்றும் அமைக்கப்பட்டு பாடசாலை புதிய மெருகுடன் காட்சியளிக்கின்றது.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும்
ரயில் (கலர்

றீகல் (யாழ். நகர்)
கடைசி
சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

வெள்ளி (சாவகச்சேரி)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

ஸ்ரீதர் (யாழ். நகர்) கடைசிவாரம் தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ்,
ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
9th—14th "FRENCH FILM FESTIVAL"
10th only:
PEPERMINT SODA

யாழ். நகரில் இதுவே கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
நடித்த
பாதாள பைரவி
மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள், காதல் காட்சிகளை வெண்திரையில் காணத்தவறாதீர்கள்.
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தப்புதிய பிரதி)

# விஷம்போல் அதிகரிக்கும் தங்கத்தின் விலை!

(ஈ. கே. ஆர்.)

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் மற்றும் பகுதிகளிலும் தங்கத்தின் விலை அதிகரிப்புக் குறித்துப் பொதுமக்களிடையே பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இதன் உண்மைநிலை குறித்தும் தங்கத்தின்விலை அதிகரிப்பின் காரணத்தை அறியவும் வடஇலங்கை நகை வியாபாரிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டபோது, சங்கத்தின் தலைவர் திரு. கே. முருகமூர்த்தியும், செயலாளர் திரு. எஸ் சிவநேசனும் இதுபற்றிச் சில விளக்கங்களைத் தந்தார்கள்.

தலைவர் சொன்னதாவது:

"யாழ்ப்பாணத்தில் இப்போது ஒரு பவுண் 2,600 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. பொதுவாக இது இருபத்தொரு காரட் தங்கமாகும்.

பழைய பவுணைத்தான் ஆட்களிடம் வாங்கி, உருக்கி, ஓடருக்குச்செய்து விற்கிறோம். 21 காரட் தங்கம் ஒருபவுண் 2,600 ரூபா என்றால், 22காரட் 2,800 தொடக்கம் 2,900வரை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

"தங்கத்தின் விலை உலக சந்தையில் அதிகரித்துவிட்டது. டாலரின் பெறுமதி எமது நாணயத்தில் அதிகரித்துவிட்டது. இதனால் எமது நாட்டில் வெளியேஇருந்து தங்கம் வருவதில் நஷ்டம். இங்கிருந்துகூடத் தங்கம் வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறது.

வியாபார விற்பனை வரி அடுத்தபிரச்னை. 5வீதம் வரி விதிக்கப்படுகிறது. பழைய பவுணை 2 500 ரூபாவுக்கு இன்றுவாங்குகிறோம். நாங்கள் உருக்கி, நகை செய்கிறோம். பின்னர் விற்பனைவரியையும் அனுசரித்து, 2 700 ரூபாவுக்கு விற்கிறோம். பின்னர் எமக்குப் பழைய பவுணை விற்கும்போது 2 600 ரூபா என்கிறார்கள். இப்படியே விலை கூடிக்கொண்டே போகிறது. இந்த விற்பனைவரியும் (பி. ரி. ரி.) விலை ஏற்றத்துக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இப்போது பழைய பவுணை வாங்கித்தான், நகைக்கடைக்காரர் விற்பனை செய்கிறார்கள். யாழ்ப்பாணம் நகரத்தில் மட்டும் நூறு நகைக்கடைகள் இருக்கின்றன. பழைய பவுணில்தான் முழுவியாபாரமும் நடக்கிறது"—இப்படி அவர் சொன்னார்.

ரூபாயின் நாணய மதிப்புக் குறைப்புப்பற்றி இங்கு பரவலாகப் பேசப்படுகிறது என்றும். இதுவும் தங்கத்தின்விலை விஷம்போல் ஏறுவதற்குக் காரணமாகும் என்றும் செயலாளர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

தை மாதம் 28-ந் திகதி

வியாழக்கிழமை

(10—2—83)

மேடம்: எக்கருமத்திலும் அறிஞர்களின் ஆலோசனை நன்று, வாகனவிருத்தியுண்டு. எழுத்தாளர்களின் உதவியுடன் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயன் அடைவார்கள்.

இடபம்: திடீர் தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கும், நினைப்பது ஒன்று நடப்பது வேறு ஒன்றாக அமையும். பிணிக்கு இடம் கொடாது நடக்கவும்.

மிதுனம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமானசம்பவங்கள் இடம் பெறும், களஸ்திர வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு, புதிய நண்பர்களின் உறவு கிடைக்கும்.

கடகம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும், அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும்,

சிங்கம்: பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும், குறிக்கோளில் வெற்றியுண்டு, மற்றவர்களின் நம்பிக்கைநலன் தரும். தெய்வ பக்தியுண்டு.

கன்னி: கைநிறையப் பணம் தாராளமாகத் தப்பாமல் கிடைக்கும், விருந்தினர்கள் தப்பாமல் தேடி வருவார்கள், தொழில் மாற்றம் நல்ல முடிவைத்தரும்.

துலாம்: வரவிலும் உயர்வு தென்படும், பெரியவர்களின் வாழ்த்தும் கிடைக்கும், எழுத்தாளர்களுக்குப் புகழ் குவியும், பொதுவாகக் கலைஞர்களின் உதவிஉண்டு.

விருச்சிகம்: நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும், உடல்நலன் பாதிக்கப்படலாம், அடக்கம் நன்று.

தனு: மனக்கோட்டைகட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். அபாயகரமான சம்பவங்களைத் தவிர்க்க வேண்டும்.

மகரம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம், அறிவுத் தாகம் மேலிடும். இன பந்துக்களின் கொண்டாட்டம் இடம் பெறும், விளையாட்டு வீரர்களுக்கு சிறப்புண்டு.

கும்பம்: அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரும், அன்னியர்களுடன் பழகுவதில் அதிக அவதானம் வேண்டும், அலட்டிக்கொள்ளாதிருப்பது விரும்பத்தக்கது.

மீனம்: வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதில் கவனம் செலுத்துவீர்கள், வியாபார விருத்தி உண்டு, மதிப்புப் பத்திரம் விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்கும்,

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை.

## வருடாந்த பெருநாள் வைபவங்கள்

(மாவிட்டபுரம்)

பருத்தித்தீவு காணிக்கை மாதா கோவில் வருடாந்த பெருநாள் வைபவங்கள் சிறப்பாக இடம்பெற்றன.

அனலைதீவுக்கும், எழுவைதீவுக்குமிடையில் அமைந்துள்ள 8 குடும்பங்களே வாழும் சிறிய தீவான பருத்தித்தீவில் வருடா வருடம் இந்த பெருநாள் வைபவங்கள் இடம்பெறுவது வழக்கம்.

இம்முறையும் திருப்பலி பூசை, திருச் சொரூப பவனி. ஆசீர்வாதம் அன்னதானம் என்பன இடம்பெற்றன.

வைபவங்களை காவலூர் பங்குக்குழு வண. எவ்.குலாஸ் அடிகள் நடத்தி வைத்தார்.

[செ]

## முதியோர் தின விழாவில் நிருபருக்கு பொன்னாடை

(கரவெட்டி)

கரணவாய் வடக்கு கிராமோதய சபையினால் கொண்டாடப்பட்ட முதியோர் தின விழாவில் பத்திரிகை நிருபர் ஒருவரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கரணவாய் வடக்கைச் சேர்ந்த திரு. வே. கனகசபையே 'நடிகர் திலகம்' என்னும் பட்டம் சூட்டப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கிராமோதய சபைத்தலைவர் திரு. ஆ. க மாணிக்கம் தலைமையில் கரணவாய் தாமோதர வித்தியாலயத்தில் நடந்த இப்பாராட்டு விழாவில் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து பொன்னாடை போர்த்தி பாராட்டினார்.

## கடத்தல் சாரங்கள் சிக்கின

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட ஐந்து பொதிகளைக் கொண்ட 1020 சாரங்களை யாழ். சுங்க இலாகா சப்கலெக்டர் திரு. எஸ். பொன்னையா தலைமையில் சென்ற கோஷ்டி வேலணை கிழக்கிலுள்ள வீடு ஒன்றில் நேற்றுக் கைப்பற்றியது

விசாரணைகளை மேற்கொண்ட சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். சிவகுருநாதன் சாரங்களைப் பறிமுதல் செய்ததுடன் வீட்டுரிமையாளருக்கு 3 ஆயிரம் அபராதம் விதித்தார்.

(மா)

## 10வது ஆண்டு நிறைவுவிழா

(புலோலி)

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஏப்ரல்மாதம்சிறப்பாக நடாத்தப்படவுள்ளது.

இப் பத்தாவது ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் மாதம் 15ம், 16ம் 17ம் திகதிகளில் நடைபெறுமென்றும் விளையாட்டுப்போட்டிகளை பாரிய அளவில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கழகச் செயலாளர் திரு. செ. சிவபாலன் தெரிவித்தார்.

## இன்று சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள கடன் வழங்கு சபையின் தவிசாளராகக் கடமையாற்றி வந்த திணைக்களத்தின் கணக்காளர் நா.திருநாவுக்கரசு வவுனியா மாவட்ட கல்வித்திணைக்களச் செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரின் சேவையைப் பாராட்டுமுகமாக இன்று பிற்பகல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் திரு த காசிநாதன் தலைமையில் சேவைநலன் பாராட்டு விழா நடைபெறும்.

இவ்விழாவில், யாழ்.மாவட்ட கல்விப் பணிப்பாளர் ம.சிமியாம்பிள்ளை, கல்வியமைச்சின் கணக்காளர் இராஜ் சுப்பிரமணியம், வட்டாரக் கல்வி அதிகாரிகள், எஸ்.கணபதிப்பிள்ளை, கு சோமசுந்தரம், வி. கே ஈசுரபாதம், இ.க.குலசேகரம், வசாவிளான் ம.ம.வி. அதிபர் ஆ.இராமசாமி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஏ. இராசரத்தினம், இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் டி எஸ்.கே.வணசிங்கா, செயலாளர் த மகாசிவம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

[கண்டி-நி]

## தென்னைசெய்கையை ஊக்குவிக்க நிலம்பகிர்ந்தளிப்பு

(புலோலி)

தென்னைச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாகப் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராஞ்சியில் ஆயிரம் ஏக்கர்நிலம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இத்தென்னங்காணிகளை வழங்குவதற்கான காணிக்கச்சேரிகள் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கிளிநொச்சி காணி அலுவலகத்திலும் நடாத்தப்பட்டன

இக்காணிக்கச்சேரியில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்குத் தலா மூன்று ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்படவுள்ளது கிராஞ்சிப் பகுதியில் வாழும் காணியற்றவர்களுக்கே இக்காணி வழங்கலில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரி இருக்கின்றனர்.

[செ]

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை இராசநாயகம்

கல்வியங்காடு ஐயாத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரனின் அன்புத் தந்தையும், நல்லூர் சேவீஸ் ஸ்ரேசன், கிளிநொச்சி சேவீஸ் ஸ்ரேசன் உரிமையாளருமான ஐயாத்துரை இராசநாயகம் அகால மரணமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-2-83 வியாழக்கிழமை (இன்று) காலை 10 மணியளவில் அவரது சகோதரர் சின்னராசாவின் கல்வியங்காடு இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 6148

## தொழில்நுட்ப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1977ல் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டது. இளைஞர்கள் பலர் சிறையில் வைக்கப்பட்டார்கள். அரசியல் எதிரிகளை அழிக்க அவசரகாலம் பயன்படுத்தப்பட்டது.

இப்போது ஜனநாயகம் அமர்ந்திருக்கவேண்டிய உச்ச நிலையில் அதனை மீண்டும் அமர்த்தியுள்ளோம். பொருளாதாரம் சீராக்கப் படுகின்றது.'' வேலையற்றிருந்தோர் வீதிகளில் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள்.

நாம் எதிர்காலத்தைப் பார்க்கவேண்டும். ஆன்மீக லௌகீக வளர்ச்சிக்கான அடித்தளம் போடப்பட்டுள்ளது. எதிர்காலம் எம்மை எங்கே அழைத்துச் செல்கிறது. அதுபற்றியும் அரசு ஆலோசித்திருக்கிறது. கம்பியூட்டர்கள், நுட்ப சாதனங்களுடன்கூடிய தொழில் நுட்ப சகாப்தத்துக்கு நாம் இளைஞர்களை அழைத்துச் செல்லவிருக்கிறோம், இதற்குத் தேவையான கருவிகளை உருவாக்கவும் கல்விஊட்டவுமான ஒரு நிலையத்தை ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்படவிருக்கின்றது.

உலக மொழியை நம் இளைஞர்கள் அறிந்திருக்கவேண்டும் என்பதையும் இது உணர்த்துகின்றது. சிங்களமும் தமிழும் போதனாமொழிகள். சிங்களம் உத்தியோக மொழி. தமிழ் இன்று ஒரு தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தையும் இந்த நிலைக்கு உயர்த்துவதானது சிங்கள-தமிழ் மக்களிடையேயும் சர்வதேச நாடுகளோடும் தொடர்பு மொழியாக அது விளங்கமுடியும்.

## நாணய மதிப்புக்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''ரூபாய் மதிப்புக்குறைக்கப்பட்டால் நாடும், வர்த்தகமும் சீர்குலைந்து நாசமாகிவிடும். இதைப்பற்றியெல்லாம் நிதியமைச்சர் விளக்கவேண்டும்.'' [இ]

## பாராளுமன்ற...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பத்துக்கு ஜனாதிபதியை பாராளுமன்றச் செயலாளர் நாயகமும், சபாநாயகரும், படைக்கலச் சேவிதர் ஆகியோரும் அழைத்துவந்தனர்.

காலை 10.05 மணிக்கு ஜனாதிபதி சபாமண்டபத்துக்குள் பிரவேசித்தார். சபையின் சம்பிரதாயபூர்வமான அமர்வுக்கு ஜனாதிபதி தலைமை வகித்தார்.

சபாநாயகர் அமரும் இடத்தில், போடப்பட்டிருந்த ஜனாதிபதிக்கான நாற்காலியில் ஜனாதிபதி அமர்ந்திருந்தார்.

ஜனாதிபதி தமது உரையை முடித்தபின்னர் சபைஅமர்வை இடைநிறுத்தினர்.

## பாராட்டு நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

'இளையநிலா' படப்பிடிப்பில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம்வரும் அலைகள் ஓய்வதில்லை புகழ் பிரபல தமிழ் நடிகர் தியாகராஜனுக்கும் 'கடல்மீன்கள்' புகழ் 'சுவப்னா'வுக்கும் பாராட்டு வைபவம் ஒன்று நாளை 11ம் திகதி மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.



# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான 'பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866

★ இல்லங்கள் எங்கும் எழில்மிகு வர்ண வேலைப்பாடுடைய தளபாடங்களை வழங்கும் நிறுவனம்.

யாழ் நகரில் எழில் மாளிகை டில்கா பேணிச்சர் பலஸ்

வாடிக்கையாளர்களே! உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

# டில்கா பேணிச்சர் பலெஸ்

## ஒரே காட்சியறையில்

கணக்கவர் மரத்தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள், பிரம்புத் தளபாடங்கள் அனைத்தும் உங்கள் தேவைக்காக விற்பனையாகின்றன.

✶ மகாராஜா செற்றிகள், ✶ 'டயனிங்' ஹோல் மேசைகள், கதிரைகள், ✶ ''பெட்றூம்'' ட்டில்கள், ''கார்டின்'' செற்றிகள், போ(F)ம் அன் றப்பர் செற்றிகள் (பூ வேலைப்பாடுகளுடன்),

ஆர்ப்பிக்கோ மெத்தைகள், ஸ்ரீல் கதிரைகள், தலையணைகள், றப்பர் காப்பெற்கள், ஸ்ரீல் மேசைகள், போமிக்கா மேசைகள்

★ LONG LIFE. ★ BEAUTIFUL DESIGNS,
★ VARIETY OF CHOICE,
★ FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS

அனைத்துப் பொருட்கள் தேவைக்கு ஏற்றவகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

"ஆர்ப்பிக்கோ" மெத்தைகள் கதிரைகள் 5% கழிவு

டில்கா பேணிச்சர் பலெஸ், 234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 24186


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/83 Eelanadu - P. O. Box 49. Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126